## Act – 13 சட்டம் - 13

| Foreign Exchange Management Act [FEMA], 1999 | அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் [பெமா], 1999 |
|---|---|
| Objective of the act is to consolidate the law relating to foreign exchange with the objective of facilitating external trade and payments. | அந்நிய செலாவணி தொடர்பான சட்டங்களை ஒருங்கிணைத்து அதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பணம் செலுத்தும் நிலையை எளிதாக்குதல். |
| The FEMA replaces the Foreign Exchange Regulation Act (FERA), 1973. | அந்நிய செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் (பெரா) 1973-யை மாற்றி பெமா சட்டம் உருவாக்கப்பட்டது. |
| The FEMA is applicable to the all parts of India. | இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் பெமா சட்டம் பொருந்தும். |
| This Act seeks to make offences related to foreign exchange Civil Offenses. FERA was Criminal Offences. | அந்நிய செலாவணி சம்பந்தப்பட்ட குற்றங்கள் சிவில் குற்றங்களாக விசாரிக்கப்படுகிறது. ஆனால் பெரா சட்டத்தில் இது குற்றவியல் குற்றங்கள் ஆகும். |
| Salient Features | சிறப்பியல்புகள் |
| 1. It classified the Foreign Exchange transactions in two categories viz Capital Account and Current Account transactions. | 1. இச்சட்டம் அந்நிய செலாவணி பரிவர்த்தனைகளை இரண்டு வகையாக பிரிக்கின்றது. அதாவது மூலதனக் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பரிவர்த்தனைகள். |

| | |
|---|---|
| 2. FEMA doesn't apply to Indian Citizen's resident outside India. | 2. இந்தியாவிற்கு வெளியில் வசிக்கும் இந்திய குடிமகனுக்கு பெமா சட்டம் பொருந்தாது. |
| 3. It provides power to the RBI for specifying in, consultation with the Central Government, the classes of capital account transactions and limits to which exchange is admissible for such transactions. | 3. மூலதனக் கணக்கு பரிவர்த்தனை பற்றிய விவரங்களில் முடிவெடுக்க அல்லது அரசுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க ரிசர்வ் வங்கிக்கு இச்சட்டம் அதிகாரம் வழங்குகிறது. |
| 4. Exporters are needed to furnish their export details to RBI. To ensure that the transactions are carried out property, RBI may ask the exporters to comply with its necessary requirements. | 4. ஏற்றுமதியாளர்கள் தனது ஏற்றுமதி விவரங்களை ரிசர்வ் வங்கியிடம் சமர்பிக்க வேண்டும். இந்நடவடிக்கையானது பரிவர்த்தனை சரியாக நடைபெறுவதை RBI உறுதி செய்வதற்காகவும் மேற்கொள்ளப்படுகிறது. |

## Scheme – 13    திட்டம் - 13

| 20 : 80 Gold Import Scheme | 20:80 தங்க இறக்குமதி திட்டம் |
|---|---|
| Union Government introduced on Import Scheme in 2013. | 2013-ம் ஆண்டு மத்திய அரசு இறக்குமதி திட்டத்தை அறிமுகப்படுத்தியது. |
| The Scheme mandated that 20% of all gold imports would have to be exported. | இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் மொத்த அளவில் 20% ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்று இத்திட்டம் கூறுகின்றது. |
| The liberalization of Gold Import – at the time of Foreign Exchange crisis and Stressed Current Account Deficit in 2013. | தங்க இறக்குமதியை தாராளமயமாக்கியதின் காரணம் - 2013-ல் ஏற்பட்ட அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் நடப்புகணக்கு பற்றாக்குறை அதிகரிப்பு ஆகும். |

We Shine Academy™

| Objective | குறிக்கோள் |
|---|---|
| To restrict the import of gold | தங்க இறக்குமதியை கட்டுப்படுத்துதல் |
| Conserve Foreign Exchange by imposing export obligation. | ஏற்றுமதி கட்டுப்பாடு விதிப்பதால் அந்நிய செலாவணி பரிமாற்றத்தை பாதுகாத்தல் |
| Ensure that premium from purchase and sale of gold resided in the hands of public agencies. | பொது நிறுவனங்கள் தங்களிடம் உள்ள தங்கத்தினை வாங்கி விற்பதால் அவர்களுக்கு பிரீமியம் கிடைக்க வழிவகை செய்தல். |
| The 20:80 scheme was open only to banks and to public sector companies such as Metals and Minerals Trading Corporation and State Trading Corporation of India. | இத்திட்டம் முதலில் வங்கிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களான உலோக மற்றும் கனிம வர்த்தக நிறுவனம் மற்றும் அரசு வர்த்தக நிறுவனம் ஆகியவற்றிற்கு மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டது. |
| In May 2014, the RBI, in consultation with the Government, widened the scheme to allow Premium Trading Houses (PTH) and Star Trading Houses (STH), both Private Sectors, to import gold. | மே, 2014-ல் ரிசர்வ் வங்கியானது, அரசுடன் கலந்தாலோசித்த பிறகு இரு தனியார் துறைகளும் சேர்த்து கொள்ளப்பட்டது. அவை பிரீமியம் வர்த்தக நிறுவனம் மற்றும் ஸ்டார் வர்த்தக நிறுவனம் ஆகும். |
| Due to some issues – The Government on November 28, 2014 scrapped the 20 : 80 scheme and removed all restrictions on gold imports. | சில பிரச்சனைகளால் - அரசு 28-ம் தேதி நவம்பர், 2014 ஆண்டு 20:80 திட்டத்தை ரத்து செய்துவிட்டது. மேலும் தங்க இறக்குமதிக்கு உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தியது |

WeShine Academy™